20.11.2025.

MCOP.N0.1769/2023

P.W. 1– திரு.மனோகர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :

விபத்தில் இறந்துபோன எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நெல்சன் மோட்டார் சைக்கிளில் குத்தன்குழியில் இருந்து வடக்கன்குளத்தை நோக்கி கிழக்கில் இருந்து மேற்காக வந்துகொண்டிருந்தார் என்றால் சரிதான். விபத்திற்குள்ளான 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எதிர்திசையில் வந்தது என்றால் சரிதான். நான் மற்றொரு இருசக்கர வாகனத்தில் நெல்சனுக்கு பின்னால் சென்றேன் என்றால் சரிதான். எவ்வளவு தொலைவு இடைவெளியில் சென்றேன் என்றால் 5, 6 மீட்டர் இடைவெளியில் சென்றுகொண்டிருந்தேன். அவ்வாறு நான் 5, 6 மீட்டர் இடைவெளியில் சென்றிருந்தால் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் என் மீதும் மோதியிருக்கும் என்றால் சரியல்ல. விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால் அது சரியான ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஆவணத்தின்படி 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் முன்இடதுபக்கம் தான் சேதம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமான மாதிரி வரைபடத்தின்படி நெல்சன் ரோட்டின் மையப்பகுதியை தாண்டி ரோட்டின் எதிர்திசையில் வந்த 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் முன்இடதுபக்கம் மோதியாக காட்டியதால் நான் அந்த வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இரவு 1.30 மணிக்கு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர

வாகனத்தை இயக்கி தானாகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்பதால் 2,3 எதிர்மனுதாரர்களை பொறுத்துமனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.3 ஆவணங்கள் படி எனது மகனுக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் அவர் தலைக்கவசம் அணியாததால் தான் தலையில் காயம் ஏற்பட்டு அவர் இறந்தார் என்றால் சரியல்ல. இறந்துபோன நெல்சனின் வேலை, வருமானம் ஆகியவற்றை நிருபிக்க சம்பளசான்று, வங்கிக்கணக்குபுத்தகம், நியமன உத்தரவு எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.11 ல் நெல்சனுக்கு 2017 ல் வேலை வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அவர் வேலை செய்ததாகவோ, சம்பளம் ஈட்டியதாகவோ காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் வெளிநாட்டில் வேலை பார்க்கவில்லை என்றும் அதனால் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை நான் கொடுத்த புகாரில் பெயரில் தான் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி நெல்சன் வடக்கன்குளத்தில் நான் நடத்திவரும் எஸ்.எம். ஹோட்டலில் எனக்கு உதவியாக வேலை செய்துவந்தார் என்று நான் குறிப்பிட்டுயிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். இழப்பீடு அதிகமாக கிடைக்கவேண்டும் என்பதற்காக என் மகன் வெளிநாட்டில் வேலை செய்வதாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை

எனக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. 2,3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

I Additional District Judge,

Tirunelveli.